**R 5390**

# நல் அறிக்கை பண்ணுதலும், தவறான அறிக்கை பண்ணுதலும்

# GOOD CONFESSION VERSUS BAD CONFESSION

“மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை மனுஷகுமாரனும் தேவதூதர் முன்பாக அறிக்கை பண்ணுவார்” – லூக்கா 12:8

**ஆதார வசனங்கள் : லூக்கா 12:1–12.**

அவரைப்போல ஒருவனும் ஒருக்காலும் பேசியதில்லையாதலால், இரட்சகரின் வார்த்தைகளை ஆர்வத்துடன் கேட்க ஒரு மாபெரும் ஜனக்கூட்டம் அவரை சூழ்ந்திருந்தது. அந்த ஜனத்திரளை பொருட்படுத்தாமல், இயேசு தம்முடைய சீஷர்களுக்கு முகவரியிட்டு கூறுகிறார்: “நீங்கள் மாய்மாலமாகிய(வெளிவேடமாகிய) பரிசேயருடைய புளித்தமாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்”. அவருடைய போதனைகளில் மற்ற வசனப்பகுதிகளில் உள்ளதுபோல இங்கேயும், தீமையின் ஆதிக்கத்துக்கு அடையாளமாக அல்லது உருவகமாக புளித்த மாவை இயேசு பயன்படுத்துகிறார். புளித்த மாவை நன்மையான அல்லது தூய்மையான எதையும் குறிப்பிட பயன்படுத்தியதாக ஒரு சம்பவத்திலும் நாம் அறியவில்லை. பஸ்கா காலங்களில் யூதர்கள் இதைப் பயன்படுத்துவதற்கு தடைசெய்யப்பட்டிருந்தனர், இவ்வாறு பாவத்தை புறம்பாக்குவது அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

அந்நாட்களில் கற்றறிந்தவர்களாயிருந்த பரிசேயர்கள், புளிப்புள்ளவர்களாக தூய்மையற்று பாவம் செய்தவர்களாக இருந்ததால், அவர்களது செல்வாக்கு கறைபடிந்திருந்தது. மாய்மாலங்கள் நடப்பிப்பதாக இயேசு அறிவித்தார். அவருடைய சீஷர்கள் நேர்மை, உண்மை மற்றும் தூய்மையுள்ளவர்களாக, பாசாங்குப்பேச்சு மற்றும் வஞ்சனையிலிருந்து விடுபட்டவர்களாக இருக்கவேண்டும். அவர்களுடைய வார்த்தைகளும் வேலைகளும் மூடிமறைக்கப்படாமல் இருக்கவேண்டும். எல்லா மாய்மாலங்களும் பாவங்களும் இறுதியில் திறக்கப்பட்டு வெளியாக்கப்படும் என்று இயேசு அறிவிக்கிறார். சந்தேகத்திற்கிடமின்றி, அவருடைய இராஜ்ஜியத்தின் காலத்தில், உயிர்த்தெழுதலின் வல்லமை செயல்படுத்தப்படும்போது, இருளின் மறைவான காரியங்கள் எல்லாம் அழிக்கப்பட்டு, மனுக்குலத்தின் இரகசியங்கள் வெளிப்படுத்தப்படும் என்று அவர் குறிப்பிடுகிறார். ஏற்கனவே முன்னறிவித்ததுபோல், இது அநேகருக்கான தண்டனையாக நிந்தை மற்றும் இகழ்ச்சியின் அடிப்படையாக உருவாக்கப்படும்.

இப்படி உயிர்த்தெழுதலில் சிலர், பரலோகத்தின் நட்சத்திரங்களாக பிரகாசிப்பதற்கும், மற்றவர்கள் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் எழுந்து வருவார்கள் என்று நாம் படிக்கிறோம்(தானி12:2). இருப்பினும் இதிலுள்ள எபிரேய வார்த்தை “நித்தியத்திற்கும்” என்றல்ல, “தொடர்ந்திருக்கும்” என்பதை குறிப்பிடுகிறது என்று அறிந்துகொள்வது ஆறுதலளிக்கிறது. ஆயினும், நிந்தை நிறைந்த மற்றும் இகழ்ச்சிக்குண்டான நிலைமைகள் நீடித்திருக்கும்வரை, இந்த நிந்தையும் இகழ்ச்சியும், அதாவது தனிப்பட்ட நபர்களின் சீர்திருத்துதல் அடையும்வரை அல்லது அதில் தவறுபவர்கள் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படும்வரை நீடித்திருக்கும்.

**துன்பங்களில் பயப்படாதீர்கள்**

வாழ்க்கையில் நேர்மையாயிருப்பது, மாய்மாலக்காரர்களிடமிருந்து தம் பின்னடியார்களுக்கு துன்பத்தைக் கொண்டுவரும் என்று இயேசு அறிவுறுத்துகிறார். ஆனால் அந்தத் துன்பம் மரணத்தை விளைவிப்பதாக இருந்தாலும் அவர்கள் பயப்படக்கூடாது என்று கூறுகிறார். இந்த தற்கால ஜீவியம் சிறந்தது, ஆனால் நிலையற்றது.. மனப்பூர்வமும் கீழ்ப்படிதலும் உள்ள யாவருக்கும் தேவன் வழங்கியிருக்கிறதும், இயேசுவின் பலியின் புண்ணியங்கள் மூலம் இறுதியில் அடையப்பெறுகிறதாகிய நித்தியத்திற்குமான ஒன்றாக, தகுதிவாய்ந்ததாக இந்த ஜீவியம் கருதப்படுகிறது. இப்படி விசுவாசிக்கிற யாவரும் தங்களுக்கு மனிதனிடமிருந்து வரக்கூடிய எதற்கும் பயப்படக்கூடாது. மாறாக, தேவனிடமிருந்தும், எதிர்கால ஜீவனுக்கான அவருடைய கிருபைநிறைந்த ஏற்பாடுகளிலிருந்தும் அவர்களைப் பிரிக்கக்கூடிய எந்த ஒரு விஷயத்திற்குமே பயப்படவேண்டும்.

“கொலைசெய்தபின்பு நரகத்திலே தள்ள வல்லமையுள்ளவருக்குப் பயப்படுங்கள்” இங்கு கூறப்பட்டுள்ள நரகம் என்ற வார்த்தை, கிரேக்கமொழியில் “கெஹன்னா” என்று உள்ளது. முன்பு இது எருசலேம் நகரத்தின் கழிவுகளை, அந்நகரத்திற்கு வெளியே இருக்கும் பள்ளத்தாக்கில் முற்றிலும் அழிப்பதற்குப் போடும் இடமாகவும், கொடூரமான குற்றவாளிகள் மரணதண்டனைக்குப்பின் கொண்டுவந்துபோடும் இடமாகவும் இருக்கிறது. அந்தப் பள்ளத்தாக்கின் பெயரே கெஹன்னா ஆகும். கொடூரமான குற்றவாளிகளை சித்ரவதை செய்வதற்கு அல்ல, மாறாக பாவிகளுக்கு எதிர்காலம் இல்லை என்பதை அடையாளமாக சுட்டிக் காட்டுவதாக இருக்கிறது. இயேசு கெஹன்னாவை, ஒளிக்கும் அறிவுக்கும் எதிராக, மனப்பூர்வமாக, அறிவுத்திறனுடன் வேண்டுமென்றே பாவம் செய்கிறவர்களின் பங்காக இருக்கப்போகிற இரண்டாம் மரணத்திற்கு நிழலாகப் பயன்படுத்தினார்.

கர்த்தருக்குப் பயப்படுதல் ஞானத்தின் ஆரம்பமாக இருக்கிறது. மேலும் தேவபக்திக்குரிய பயம் எப்போதும் முறையானதாகவே இருக்கிறது. ஆனால் தேவனுடன் நெருங்கி அவரை அறிந்திருக்கிற அவருடைய ஜனங்கள், அவருடைய நீதி ஞானம் அன்பு மற்றும் வல்லமையை கற்றறிவதோடு, நீதியை நேசிக்கிற அனைவருக்கும் அவர் நண்பனாக இருக்கிறார் என்பதை உணர்ந்து, தேவனை நேசிக்கவருவார்கள். மேலும் அப்போஸ்தலர் அறிவிக்கிறதைப்போல, "பூரண அன்பு பயத்தைப்(தீங்கு செய்ததால் உண்டான பேரச்சம்) புறம்பே தள்ளும்".இது இளைப்பாறுதலை அடையாளப்படுத்துகிறது. கர்த்தருடைய சீஷர்கள் அவர்களுக்கான தங்கள் பரமபிதாவின் அக்கரையை உணரவேண்டும். மேலும் அவர் அடைக்கலான் குருவியையும் மறவாதிருப்பதுபோல, அவர்களையும் மறப்பதில்லை என்கிற அவருடைய ஞானத்தை உணரவேண்டும். அவருடைய அறிவும் அனுமதியுமின்றி, அவர்களுடைய தலையில் உள்ள மயிராகிலும் சேதமடைவதில்லை என்பதை உணரவேண்டும்; அவருடைய ஜனங்களுக்கு அவருடைய பிள்ளைகளுக்கு நேரிட அவர் அனுமதித்திருக்கும் அனைத்தும், அவர்களுக்கு சில ஆசீர்வாதங்களை தருவதற்காகவே இருக்கிறது என்று அவர் உறுதியளித்திருக்கிறதையும் உணரவேண்டும்.

**மனிதருக்கு முன்பாக என்னை அறிக்கையிடுங்கள்**

தேவனுடன் இசைவாக இருக்கவிரும்புகிற எவரும், அவரையும் அவர் உலகத்திற்கு அனுப்பிய, அவருடைய பிரதிநிதியாகிய இயேசுவையும் அறிக்கை பண்ணவேண்டும். இயேசுவை அறிக்கையிடுகிற எவரும் அவரை அனுப்பிய பிதாவையும் அறிக்கையிடுகிறார்கள். அப்படிப்பட்ட அனைவரும் கர்த்தருடைய தயவில் இருப்பார்கள். இறுதியில் பிதாவினாலும், பரிசுத்த தூதர்களினாலும் கிறிஸ்துவின் மணவாட்டியின் அங்கத்தினராக உயிர்த்தெழுதலில் ஏற்றுக்கொள்ளப்படுவர். ஆனால் கிறிஸ்துவின் சீஷர்களாக ஆனபிறகு அவரை மறுதலிக்கிறவர்களை, சீஷர்களாக அவர் மகிமையில் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

இயேசுவின் வார்த்தைகள் பொதுவான ஜனங்களுக்கு அல்ல, அவருடைய சீஷர்களுக்கே முகவரியிடப்பட்டுள்ளது. கிறிஸ்துவை அறிக்கையிடுகிற எவரும் அவருடைய சீஷராவர். அவரை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாதவன் அவரை மறுதலிக்கமுடியாது. அவரை அறிக்கைபண்ணுவது என்பது, வெறும் ஞானஸ்நானத்தின் மூலமாகவோ அல்லது எந்த ஒரு வெளிப்புற வடிவத்தினாலோ அல்ல. தம் சீஷர்களின் வாழ்க்கையில், நடத்தையில், வார்த்தைகளில் அவரை அறிக்கை பண்ணவேண்டும். அவர்கள் அவருடைய ஆவியை உடையவர்களாய் இருந்து, அந்தகாரத்திலிருந்து ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு தங்களை வரவழைத்தவரின் புண்ணியங்களை அறிவிக்கவேண்டும். சீஷராக இருப்பதன் வேலையை ஏற்றுக்கொண்ட எவரும், பின்னர் போதகரின் போதனைகளைப் புறக்கணித்து, தவறாக திரித்துக்கூறி, புறங்கூறி, அவரை மறுதலித்தால்,

பரிசில் பங்கடைய மாட்டார்கள்.

நிச்சயமாகவே, சந்தேகத்தில் இருக்கும் பெருந்திரளான ஜனங்கள் ஒருபோதும் அவருடைய சீஷராக ஆகவில்லை. சிலர் இயேசுவை பிசாசுபிடித்தவன் என்றும், பைத்தியக்காரன் என்றும்கூட ஏளனமாக கூறினர். இப்படி அவரை தவறாக புரிந்துகொண்டவர்கள், அவதூறு பேசுகிறவர்கள், அறியாமையில் செய்வார்களானால், அவர்களுக்கு முழுவதும் மன்னிக்கப்படும் என்று போதகர் அறிவிக்கிறார். ஆனால் சிலர் இதற்கும் மேலாக சென்று, பரிசுத்தஆவியினால் செய்யப்பட்ட அவருடைய இந்த யுகத்தின் இறுதியில் மணவாளனின் மகிமை நிறைந்த நற்கிரியைகளை அவர் பெயர்செபூலாகிய சாத்தானின் வல்லமையின் மூலமாக செய்தார் என்று அறிவிக்கும்போது, அவர்கள் அகற்றமுடியாத, மன்னிக்கமுடியாத பாவங்களை செய்தவர்களாக இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட பாவம் மனப்பூர்வமானதாக இருக்கும். அவர்களுடைய குற்றச்சாட்டுக்கு எவ்வித அடிப்படையும் இல்லை. போதகரின் போதனைகள் தன்னில்தானே தூய்மையுடையதாயிருக்கிறது. அவருடைய நடத்தை, அவர் போதித்தவை, அவருடைய அற்புதங்கள் எல்லாம் நற்கிரியைகளாக இருந்தன. மனப்பூர்வமான முறைகேடு மட்டுமே, இந்த குணங்களை சாத்தானுக்குரியதாக கற்பனைசெய்யும். இருப்பினும் அவர்கள் ஒருபோதும் மன்னிக்கப்படமாட்டார்கள் என்பது – அவதூறு கூறுகிறவர்கள் நம்பிக்கையற்றவர்களாக இழந்துபோவர் என்பதை அடையாளப்படுத்தவில்லை என்பது உண்மை. அவர்கள் தங்கள் மனப்பூர்வத்தன்மையின் அளவுக்கேற்ற விகிதத்தில் தண்டனையை அனுபவிப்பர். அந்த தண்டனை சீர்திருத்தத்தை கொண்டுவருமானால் நன்று, நல்லது. ஆனால் அப்படி கொண்டுவரவில்லையெனில், அது முழுமையான அழிவில் இரண்டாம் மரணத்தில் முடிவுறும்.

சில பாடங்கள் பரிசுத்தஆவிக்கு எதிரான பாவத்தைப்பற்றின பாடத்தைவிட குறைவாகவே புரிந்துகொள்ளப்பட்டுள்ளன. அப்படிப்பட்ட விஷயங்களில், ஆவி என்ற வார்த்தை, வல்லமை அல்லது செல்வாக்கைக் குறிக்கிறது. உதாரணமாக சாத்தானின் ஆவி, தேவனுக்கும் நீதிக்கும் எதிரான ஒரு வல்லமையாக – அதாவது செல்வாக்காக இருக்கிறது. தப்பறையின் ஆவி பொய்யின் வல்லமையாக அல்லது செல்வாக்காக இருக்கிறது. அதற்கு நேர்மாறாக சத்தியத்தின்ஆவி, தேவனின் ஆவி, பரிசுத்தஆவியானது எங்கும் அடையாளம் கண்டுகொள்கிற

தெய்வீக செல்வாக்கையும் வல்லமையையும் குறிக்கிறது. ஒவ்வொரு தனிப்பட்ட நபர்களின் பொறுப்புணர்வானது, அவர்கள் ஒளியூட்டப்பட்டதன் அளவிற்கு ஏற்றவிகிதத்தில் இருக்கிறது. மன ரீதியாகவும் ஒழுக்க ரீதியாகவும் குருடானவர்கள் ஒப்பிட்டுப்பார்க்கையில் குறைவான அளவு பொறுப்பையே உடையவர்களாயிருக்கிறார்கள். ஏனெனில் அவர்கள் சத்தியத்தின் ஆவிக்கும் தப்பறையின் ஆவிக்கும், தேவனுடைய ஆவிக்கும் சாத்தானின் ஆவிக்கும் இடையிலான வேறுபாட்டை தெளிவாக மதிப்பிட்டு புரிந்துகொள்ளவில்லை.

மனிதன் சரியானதையும் தவறானதையும் நன்மையையும் தீமையையும் உணர்ந்துகொள்வதற்கான ஆற்றலின்றி சிருஷ்டிக்கப்படவில்லை. அவன் தேவனுடைய சாயலிரும் ரூபத்திலும் பரிபூரணமாக சிருஷ்டிக்கப்பட்டான். பாவமானது மனிதனுடைய சரீரத்திற்கு மாத்திரமல்ல, அவனுடைய சிந்தைக்கும், மனசாட்சிக்கும்கூட மரணத்தை உண்டாக்கியது. எனவே சரியானவற்றிக்கும் தவறானவற்றிற்கும் இடையிலான வேறுபாட்டை உணர்ந்துகொள்ளும் திறனும் வேறுபடுகிறது. கூடுதலாக, சிலர் மற்றவர்களைக் காட்டிலும் கற்கும் வாய்ப்புக்களை பெற்றிருந்தனர். இவ்வாறு அவர்களுடைய பொறுப்பு அதிகரித்திருக்கிறது. பொதுவான உலகஜனங்கள் தேவனை அறியவில்லை, இதனால் இரண்டாம் மரணத்தில் தண்டனையடையும் விதத்தில் முழு உணர்வில் அல்லது முழுஅளவில் பரிசுத்தஆவிக்கு எதிராக பாவம் செய்யமுடியாது. “அவிசுவாசிகளாகிய அவர்களுக்கு பிரகாசமாயிராதபடிக்கு இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதை குருடாக்கினான்” – 2கொரிந்4:4.

தேவனால் அனுப்பப்பட்டவராகிய கிறிஸ்துவை புரிந்து, மதிப்பிடும் அளவுக்கு நம்மை கொண்டுசெல்ல கொஞ்சம் அறிவு அவசியமாயிருக்கிறது. பின்பு அவரை ஏற்றுக்கொண்டு, அவருடைய அர்ப்பணிக்கப்பட்ட சீஷர்களாக அல்லது பின்னடியார்களாக மாறினால் நாம் பரிசுத்தஆவியின் ஜெநிப்பிக்குதலைப் பெறுகிறோம். நாம் பரிசுத்தஆவியினால் நிரப்பப்பட்ட அளவிற்கு ஏற்ற விகிதத்தில், நம்முடைய புரிந்துகொள்ளுதலின் கண்கள் மேலும் விரிவாக திறக்கின்ற ஒரு அனுகூலமான இடத்திற்கு இது நம்மைக் கொண்டுசெல்லும். கர்த்தரிடத்திலான நம்முடைய சந்தோஷத்தோடும், நாம் அழைக்கப்பட்ட பரலோக மகிமைக்கான நம்முடைய ஆயத்தத்தோடும் நம்முடைய பொறுப்புணர்வு அதிகரிக்கிறது. இயேசுவின் முதிர்ச்சியடைந்த சீஷர்கள், தாங்கள் முத்தரிக்கப்பட்ட பரிசுத்தஆவியை துக்கப்படுத்துகிற – தங்கள் இருதயங்களில் பரிசுத்தத்தின் ஆவியை அவித்துப்போடுகிற ஆபத்தில் இருக்கிறார்கள்(எபே4:30; 1தெச5:19). அவித்துப்போடுவதும், துக்கப்படுத்துவதும் உடனடியாக நிகழ்கிற செயல்கள் அல்ல. அவைகள் இரண்டாம் மரணத்திற்கு வழிநடத்தும் பாதைகளாக இருக்கின்றன. எனவே ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஆவியினால் நிரப்பப்பட்டு பரிசுத்தத்தின் பூரணத்தை நோக்கித் தொடரவேண்டும்.

இந்தக் கருத்தை அப்போஸ்தலன் எபிரே6:4–6ல் கூறும்போது; தேவனுடைய நல்வார்த்தைகளையும் இனிவரும் உலகத்தின்(யுகங்களின்) பெலன்களையும்(வல்லமைகள்) ருசிபார்த்து, பரிசுத்தஆவியைப்பெற்றவர்கள், மனப்பூர்வமாய், வேண்டுமென்றே கிறிஸ்துவையும் , நீதியையும் மறுதலித்து, பாவத்திற்கு திரும்புவார்களானால், அவர்களை மனந்திரும்புதலுக்கு ஏதுவாக புதுப்பிக்கமுடியாது என்று கூறுகிறார். மறுபடியும் அவர் கூறுகையில்; “சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவம் செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளை– தேவனுடைய விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்” என்று கூறுகிறார்(எபி10:26,27). அப்போஸ்தலர் குறிப்பாக, கிறிஸ்துவின் ஒப்புரவாக்கும் பணியை மறுதலிப்பதையே குறித்துக் காட்டுகிறார். அதில், அப்படிப்பட்டவர்கள் அவர்களை பரிசுத்தப்படுத்தின உடன்படிக்கையின் இரத்தத்தை ஒரு சாதாரண பொருளாக எண்ணுவார்கள் என்றும், இவ்வாறு வெகுதூரத்திலிருந்த அவர்களை அருகில் கொண்டுவந்த தயவின் ஆவியை ஏளனம் செய்வார்கள் என்றும் கூறுகிறார்.

பரிசுத்தத்தின் ஆவியை அவித்துப்போடுகிறவர்கள் அல்லது ஆவியை துக்கப்படுத்துகிறவர்கள், ஆவிக்குரிய விதத்தில் வியாதிப்பட்டுள்ளதாக அப்போஸ்தலர் யாக்கோபினால் (5:14) குறிப்பிடப்படுகிறார்கள். தேவனுடனான ஐக்கியத்திலிருந்து துண்டிக்கப்பட்டவர்கள், கடைசியாக ஒரே புகலிடத்தை பெற்றுள்ளனர். அதாவது அவர்களுக்காக ஜெபிப்பதற்கும், பரிசுத்தஆவியை அடையாளப்படுத்துகிற எண்ணெயைப் பூசுவதற்கும், சபையின் பரிசுத்தமாக்கப்பட்ட மூப்பர்களின் உதவியை வேண்டுவதே அந்த கடைசி புகலிடம். விசுவாசமுள்ள ஜெபம் இந்த ஆவிக்குரிய வியாதியை குணமாக்கும். கர்த்தர் அவர்களை எழுப்புவார். அவர்கள் பாவம் செய்திருந்தபோதிலும், இவைகள் அவர்களை மன்னிக்கும்.

### பரிசுத்தஆவி போதிக்கும்

தவறாக குற்றஞ்சாட்டுதலானது, நீதிபதிகளின் முன்பாக தங்களைக் கொண்டுசேர்க்கும், தங்களுடைய துன்பங்களோடுகூட இதுவும் நடக்குமென கர்த்தருடைய பின்னடியார்கள் எதிர்பார்த்தனர். பெரும்பாலான சீஷர்கள் கல்வியறிவற்றவர்களாகவே இருந்தனர், கற்றறிந்த அதிகாரிகளின் முன்னிலையில் மாபெரும் நடுக்கத்தை உணர்ந்தனர். இருப்பினும், கர்த்தருடைய ஆசீர்வாதம்

அவர்கள்மீது இருந்ததை அவர்கள் அறிந்திருந்தனர். மேலும் அவர்கள் இயல்பாக உள்ளதைவிட தாங்கள் உன்னதமான ஞானத்தைப் பெற்றிருக்கிறோம் என்பதையும் அறிந்திருந்தனர். அவர்களுடைய பதில்கள் என்னவாக இருக்கவேண்டும் என்று கவலையுடன் முன்கூட்டியே சிந்திக்க அவசியம்இல்லை. ஆனால் எல்லாவற்றையும் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்து, தெய்வீக உதவியை எதிர்பார்க்கவேண்டும்.

கிறிஸ்துவின் ஊழியர்கள் சபை பிரசங்க மேடையிலோ அல்லது சபை ஐக்கியத்தின்போதோ, தங்களுடைய சத்திய பாடத்தைப் படிக்காமல், கர்த்தரை வெளிப்படுத்த முயற்சிக்கவேண்டும் என்று சுட்டிக்காட்டப்படவில்லை. அதற்கு மாறாக, ஒவ்வொருவரும் தீமோத்தேயுக்கான அப்.பவுலின் வார்த்தைகளை தங்களுக்கு ஏற்றுக்கொள்ளவேண்டும்: ''நீ வெட்கப்படாத ஊழியக்காரனாய், உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாய் நிறுத்தும்படி, சத்திய வசனத்தை சரியாய் பகுத்து, கற்றுக்கொள்''(2தீமோ2:15). தேவனுடைய வாயாக, அவருடைய ஜனங்களின் சபைக்கு முன்பாக நிற்பதற்கும், நீதிபதிகள் முன்பாக நிறுத்தப்படுவதற்கும் வித்தியாசம் உள்ளது.

―――――――――――――



For More E books and Tracks - Write a E-mail to - victorgnanaraj01@gmail.com Website : www.thestudiesinthescriptures.com,
For Private Circulation Only